# இன்றைய வேளாண் செய்திகள்

# 24.09.2013

## செப் .27-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செப் .27-ஆம் தேதி பிற்பகல் 3.30 மணிக்கு விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது. மாவட்ட ஆட்சியர் கே .எஸ். பழனிசாமி தலைமையில் நடைபெறும்இக்கூட்டத்தில், விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்களது குறைகளை தெரிவித்து தீர்வு காணலாம் என்று ஆட்சியரின் நேர்முக உதவியாளர் .செ (விவசாயம்) முத்தையா தெரிவித்தார்.

## நெல் சாகுபடியில் மகசூலை இரட்டிப்பாக்க வழிமுறைகள்

திருந்திய நெல் சாகுபடி செய்து மகசூலை இரட்டிப்பாக்க சிங்கம்புணரி வேளாண்மை உதவி இயக்குநர் சர்புதீன் அகமது யோசனை தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை: ஒற்றை நாற்று முறையான திருந்திய நெல் சாகுபடி முறையில் ஒரு ஏக்கருக்கு 3 கிலோ விதை மட்டும் போதுமானது. நாற்றங்கால் பரப்பும் மிகவும் குறைவு. 15 முதல் 20 நாட்களில் பறித்து நடலாம். இப்புதிய முறையில் ஒரு குத்திற்கு 30 முதல் 40 சிம்புகள் சரசாரியாக உருவாகி மகசூல் இரட்டிப்பாகும். மேலும் நடவு வயலில் நல்ல காற்றோட்டமும், சூரிய வெளிச்சமும் கிடைத்து பூச்சி நோய் தாக்குதலின்றி நெல் பயிர் நன்றாக வேர் பிடித்து இடுகின்ற அனைத்து உரச்சத்துக்களையும் கிரகித்து செழிப்பாக வளர்ந்து நெல்மணிகளின் எண்ணிக்கையும் கூடுதலாகிறது. எனவே இப்புதிய முறையை கடை ப்பிடித்து நெல்லில் அதிக மகசூல் பெறலாம் வேளாண்மை உதவி இயக்குநர் சர்புதீன் அகமது கேட்டுக் கொண்டுள்ளார்.

## தேங்காய்க்கு ரூ.10 ஆதரவு விலை நிர்ணயித்துக் கொள்முதல் செய்யவேண்டும்

விலை சரிவைத் தடுக்க ரூ.10 ஆதரவு விலை நிர்ணயித்து தேங்காயை அரசே கொள்முதல் செய்யவேண்டும் என தென்னை விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழகத்தின் மொத்த தென்னை விவசாயத்தில் 80 சதவீதம் கோவை, திருப்பூர் மாவட்டங்களில் மட்டுமே உள்ளது. நீண்ட காலப் பயிரான தேங்காய்க்கு கட்டுபடியான விலை கிடைப்பதில்லை என்பது விவசாயிகளின் மிகப்பெரிய குறையாக

உள்ளது. விவசாயிகள் நீண்ட நாள் கோரிக்கை விடுத்ததை அடுத்து தேங்காய் விலை சரிவை தடுக்க, மத்திய அரசு, கொப்பரை கிலோவுக்கு ரூ.51 ஆதரவு விலையாக அறிவித்து, தமிழக வேளாண்மைக் கூட்டுறவு இணையம் (டான்பேட்) வாயிலாகக் கொள்முதல் செய்கிறது.

இந்த ஆண்டு 1 கிலோ கொப்பரைக்கு மேலும் ரூ.1.50 விலை அதிகரித்து ரூ.52.50-க்கு

கொள்முதல் செய்யப்படுகிறது. கொப்பரைக்கு ஆதரவு விலை நிர்ணயித்தும் தேங்காய் விலை சரிவை தடுக்க முடியவில்லை.

இதற்கு காரணம் சிறிய விவசாயிகள் முதல் பெரிய விவசாயிகள் வரை கொப்பரையை உலர வைக்கத் தேவையான உலர் களங்கள் இல்லை.

ஒவ்வொரு தென்னை விவசாயியும் கொப்பரையை உலர வைக்க களங்கள் அமைப்பது என்பது சாத்தியமில்லாததாகும். இதனால், விவசாயிகள் இடைத்தரகர்களிடம் குறைந்த விலைக்கு தேங்காயை மொத்தமாக விற்பனை செய்துவருகின்றனர்.

இடைத்தரகர்கள் அவற்றைக் கொப்பரைகளாக மாற்றி விவசாயிகள் என்ற போர்வையில் அரசின் ஆதரவு விலையைப் பெற்றுக்கொள்கின்றனர். இதனால், விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய ஆதரவு விலை இடைத்தரகர்களைச் சென்றடைகிறது.

இதனால், ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய பல கோடி ரூபாய், இடைத்தரகர்களைச் சென்றடைவதால் அரசின் நிதி வீணாவதுடன் அரசின் முயற்சியும் வீணாகிறது.

இப்பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வுகான தேங்காய்க்கு ரூ.10 ஆதரவு விலை நிர்ணயித்து, தேங்காயை அரசே கொள்முதல் செய்ய வேண்டும் என்பது விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

தமிழகத்தில் உள்ள தென்னை விவசாயிகள் பாதிக்கப்படுவதை தடுக்க, இது குறித்து மாநில அரசு, மத்திய அரசிடம் கலந்தாலோசிக்க வேண்டும்.

இது குறித்து தென்னிந்திய தென்னை சாகுபடியாளர் சங்கத் தலைவர் கிருஷ்ணசாமிக்கவுண்டர் கூறியது: கொப்பரைக் கொள்முதல் செய்வதில் விவசாயிகள்

பயனடைவதை விட இடைத்தரகர்கள்தான் அதிகம் பயனடைகின்றனர். இதைத் தடுக்க தேங்காய்க்கு ரூ.10 ஆதரவு விலை நிர்ணயித்து தேங்காயை அரசே கொள்முதல் செய்யவேண்டும். இல்லாவிட்டால் விவசாயிகளுக்கு எந்த பயனும் கிடைக்காது.

## உழவர் உற்பத்தியாளர் அமைப்பு துவங்கிய ஈஷா

ஈஷா அறக்கட்டளை சார்பில் தொண்டாமுத்தூர் பகுதியில் உழவர் உற்பத்தியாளர் அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது.

ஈஷா அறக்கட்டளை சார்பில் தொண்டாமுத்தூர் பகுதியைச் சேர்ந்த 500 விவசாயிகளை ஒருங்கிணைத்து முதற்கட்டமாக உழவர் உற்பத்தியாளர் அமைப்பு அண்மையில் தொடங்கப்பட்டது.

இந்த அமைப்பின் மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை இடை வணிக தலையீடுகள் இன்றி நேரடியாக விற்பனை செய்ய முடியும். 2013 மே மாதம் ஏற்கனவே ஈஷாவால் துவங்கப்பட்டு செயலாற்றி வரும் வெள்ளியங்கிரி, உழவர் உற்பத்தியாளர் நிறுவனம், விவசாயிகளின் விளைச்சலைப் பெருக்கவும், பருவகாலத்திற்கேற்ற விவசாயத்தை தேர்வு செய்து மேற்கொள்ளவும் வழிகாட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

சிறு விவசாயிகள் வேளாண் தொழில் கூட்டமைப்பு இயக்குநர் ப்ரவேஷ் ஷர்மா, தமிழக அரசின் வேளாண்மை சார்ந்த சந்தைப்படுத்துதல் மற்றும் வேளாண் தொழில் இயக்குநர் மேஷ்ரம் ஆகியோர் இப்புதிய அமைப்பைத் துவக்கி வைத்தனர். தேங்காயை முதற்கட்டமாக சந்தைப்படுத்தியுள்ள உழவர் உற்பத்தியாளர் அமைப்பானது, தேங்காயின் மதிப்புக் கூட்டுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறது. மேலும் கரும்பு, மஞ்சள், வாழை ஆகியற்றை சந்தைப்படுத்தவும் தயாராகி வருகின்றனர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம்

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 79.43 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 3,607 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,300 கன அடி நீரும், வாய்க்காலில் 2,500 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 15.38 டி.எம்.சி.

## உதகையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

உதகையில் நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்துக்கு ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் தலைமை வகித்தார். இக் கூட்டத்தில் தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் மணி தலைமையிலான அலுவலர்கள் குழுவினரும், விவசாய சங்கங்கள் மற்றும் பல்வேறு அரசுத்துறை அலுவலகங்களைச் சேர்ந்தோரும் பங்கேற்றனர்.

மாவட்டத்தில் நீலகிரி மாவட்ட விற்பனை துறையின் மூலம் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்ட நிதியிலிருந்து ரூ.85 லட்சம் செலவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கவும், சேரிங்கிராஸ் பகுதியில் காய்கறி விதை வளாகம் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. வன விலங்குகளால் ஏற்படும் இழப்பீடுகள் மற்றும் நஷ்ட ஈடு தொகை தகுதியின் அடிப்படையிலுமாக ரூ.4.7 லட்சம் வழங்கப்பட்டுள்ளதாக வனத்துறையின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு காய்கறி விதைகள் விவசாயிகளின் தேவைக்கேற்ப வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தோட்டக்கலைத்துறையின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. டிஏபி, பொட்டாஷ், யூரியா போன்ற நேரடி உரங்கள் விவசாயிகளின் தேவைக்காக போதிய அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவுத் துறையின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

## திருந்திய நெல் சாகுபடி முறை பயிற்சி

திருந்திய நெல் சாகுபடி முறை குறித்த பண்ணைப் பள்ளி வகுப்பு காட்பாடியை அடுத்த பெரியபுதூர் கிராமத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குவர் ஜி.விஜயகுமார் தலைமை வகித்தார். விரிஞ்சிபுரம் வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் பி.ஸ்ரீதர் பங்கேற்று திருந்திய நெல் சாகுபடி முறையில் கையாளப்படும் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கினார்.

இப்பயிற்சி வகுப்பில் 40 விவசாயிகள் பங்கேற்றனர்.

## "பட்டு விவசாயிகள் சலுகைகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்'

தருமபுரி மாவட்டத்தில் பட்டு வளர்ச்சித் துறையின் சார்பில், அரசு வழங்கும் சலுகைகளை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் கேட்டுக் கொண்டார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் திங்கள்கிழமை நடைபெற்ற மக்கள் குறைதீர் கூட்டத்தில் அவர் பேசியது:

தருமபுரி மாவட்டத்தில் பட்டு வளர்ச்சித் துறையின் சார்பில் மல்பரி செடி வளர்க்க ஏக்கருக்கு ரூ.6,750 மானியமாக வழங்கப்படுகிறதுமேலும் ., சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க ரூ.20 ஆயிரமும் வழங்கப்படுகிறது. பட்டுப் புழு வளர்ப்பு மனை அமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.75 ஆயிரம் வரை அரசு மானியம் வழங்குகிறது. இந்தச் சலுகைகளை பட்டு விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் ஆட்சியர்.

கூட்டத்தில் பட்டுவளர்ச்சித் துறையின் சார்பில் மல்பெரி பயிர் சாகுபடி செய்த 2 விவசாயிகளுக்கு மானியத் தொகை ரூ.20,250-க்கான கசோலையை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

மேலும், இந்தக் கூட்டத்தில் பெற்றப்பட்ட 521 மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அவர் தக்க ஆலோசனைகளையும் வழங்கினார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பராமர்., தனித் துணை ஆட்சியர்கள் என்செல்வராஜன்., எஸ்.றனர்சேதுமாதன் உள்ளிட்டோர் பங்கேற்.

## முட்டை விலை

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை, அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.3.25, சென்னையில் ரூ .3.33. கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.52, முட்டைக் கோழி கிலோ ரூ.58.

## நிலக்கடலை பயிர் காப்பீடு செய்யும் பிரீமியத்திற்கு அரசு மானியம்

பரமத்தி வேலூர் வட்டம், பரமத்தி வட்டாரத்திற்கு உள்பட்ட பகுதியில் மானாவாரியில் நிலக்கடலை பயிர் செய்யும் விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீடு செய்யும் பிரீமியத்திற்கு அரசு மானியம் வழங்கப்படுகிறது.

இதுகுறித்து பரமத்தி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் குருலிங்கம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பது:

நிகழாண்டு மானாவாரி பருவத்தில் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தேசிய வேளாண்மை காப்பீட்டுத் திட்டத்தில் பயிர் காப்பீடு செய்ய வரும் 30-ஆம் தேதி இறுதி நாளாகும் நிலக்கடலைக்கு காப்பீடு செய்ய பயிர் காப்பீட்டுத் தொகையில் .9 சதம் பிரீமியம் செலுத்த வேண்டும்.

இந்த பிரீமியத் தொகையில் 50 சதத் தொகையை அரசு மானியமாக வழங்கி வருகிறது . இதற்கான விண்ணப்பங்களை பரமத்தி வேளாண்மை விரிவாக்க மையத்தில் விவசாயிகள் பெற்று பயனடையுமாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஓமலூர் பகுதியில் உயிரிழக்கும் அதிகாரிகள் அலட்சியம :கறவை மாடுகள்

ஓமலூர் பகுதியில் மர்ம நோய்த் தாக்குதலால், கறவை மாடுகள் தொடர்ந்து உயிரிழந்து வரும் நிலையில், கால்நடை பாதுகாப்பு முகாம்களை நடத்தாமல் அதிகாரிகள் அலட்சியம் காட்டி வருவது விவசாயிகளை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. ஓமலூர் வட்டத்தில்,கடந்த சில நாள்களாக மர்ம நோயால், கறவை மாடுகள் உயிரிழப்பது தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ஓமலூர் அருகேயுள்ள பள்ளக்காட்டூர் பகுதியைச் சேர்ந்த விவசாயி பெருமாளுக்கு சொந்தமான இரண்டு கறவை மாடுகள் கடந்த சனிக்கிழமை உயிரிழந்தனஇந்நிலையில் . அவருக்கு சொந்தமான கன்றுக்குட்டி ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்ததுமேலும் .,அதே பகுதியைச் சேர்ந்த விவசாயி கோவிந்தனுக்கு சொந்தமான கறவை மாடும், கன்றுக்குட்டியும் நோய்த் தாக்குதலால் பாதிக்கப்பட்டிருந்து நிலையில் திங்கள்கிழமை உயிரிழந்தன மூன்று நாள்களில் .5 கறவை மாடுகள் உயிரிழந்துவிட்ட நிலையில் சம்பந்தப்பட்ட கிராமங்களில் இதுவரை எந்த பாதுகாப்பு நடவடிக்கையும் தொடங்கப்படவில்லைதனை செய்யப்படாமலேஇறந்துபோன மாடுகள் பரிசோ . புதைக்கப்பட்டன.

ஓமலூர் பகுதியில் மாடுகளைத் தாக்கும் இந்த நோய் மற்ற பகுதிகளுக்கும் பரவாமல்

தடுக்கும் வகையிலும், மாடுகள் உயிரிழப்பினை தடுத்து நிறுத்தும் விதமாகவும், கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 27-ல் விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம்

கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் வருகிற 27-ம் தேதி நடைபெறவுள்ளது.

இதுகுறித்து கடலூர் மாவட்ட ஆட்சியரகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

செப்டம்பர் மாதத்துக்கான விவசாயிகள் குறைகேட்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் வரும் 27-ம் தேதி கடலூர் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில் ஆட்சியர் ரா. கிர்லோஷ்குமார் தலைமையில் காலை 10.30 மணியளவில் நடைபெற உள்ளது.

கடலூர் மாவட்ட விவசாயிகள் வேளாண்மை சார்ந்த குறைகளை கோரிக்கைகளாக வைக்க அனைவருக்கும் வாய்ப்பு வழங்கப்படும். இதற்காக விவசாயிகள் தங்களது பெயர்களை முன்னதாக பதிவுசெய்து கொள்ள வேண்டும்.

கோரிக்கைகளை மனுவாகவும் அளிக்கலாம். கோரிக்கைகளுக்கு சம்பந்தப்பட்ட துறையின் உயர் அலுவலர்கள் உரிய பதில் அளிக்கவும், தொடர் நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தூத்துக்குடியில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

மருதூர் கீழக்கால் விரிவாக்க திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வலியுறுத்தி, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் விவசாயிகள் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தூத்துக்குடி மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவேற்றும் வகையில் மருதூர் கீழக்கால் விரிவாக்க திட்டத்தை உடனடியாக செயல்படுத்தக் கோரியும், புதுக்கோட்டை அருகே தட்டப்பாறை விலக்கில் உள்ள சுங்கச்சாவடியை அகற்றக் கோரியும், தூத்துக்குடி மாவட்ட உழவர், தொழிலாளர் கூட்டமைப்பு, தாமிரவருணி பாசன உரிமைப் பாதுகாப்பு பேரவை ஆகியன சார்பில் தூத்துக்குடியில் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்துக்கு, தாமிரவருணி பாசன உரிமைப் பாதுகாப்பு பேரவைத் தலைவர் அ. வியனரசு தலைமை வகித்தார்.

தாமிரவருணி நதிநீர் பாதுகாப்பு பேரவைத் தலைவர் நயினார் குலசேகரன், இந்திய கம்யூனிஸ்ட் மாவட்டச் செயலர் மோகன்ராஜ், புதுக்கோட்டை வியாபாரிகள் சங்கத் தலைவர் பீட்டர், மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் மாவட்டக் குழு உறுப்பினர் ராஜமாணிக்கம், மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட துணைச் செயலர் ரியாஸ்கான் உள்பட பலர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின்போது, மருதூர் அணை நான்காவது குடிநீர் குழாய் திட்டத்தை கைவிட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

## வெங்காய விலை உயர்வுக்கு மத்திய அரசுதான் காரணம்

வெங்காய விலை உயர்வுக்கு மத்திய அரசுதான் காரணம். வியாபாரிகளைக் குறை கூறுவது தேவையற்றது என்றார் தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பின் தலைவர் விக்ரமராஜா. கருங்கல்லில் வியாபாரிகள் நலச்சங்க ஆண்டு விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்ற மேலும் அவர் பேசியதாவது.

இந்தியா இன்று பொருளாதார வீழ்ச்சியில் சென்று கொண்டிருக்கிறது. இதற்கு மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையே காரணம். சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீட்டு பிரச்னையில் நமெக்கென்ன என்று பொதுமக்கள் இருந்துவிடக் கூடாது. வியாபாரிகளுக்கு பாதிப்பு என்றால் அனைத்து தரப்பு மக்களையும் அது பாதிக்கும். எனவே பொதுமக்கள் அனைவரும் ஒன்று கூடி போராட வேண்டும்.

வெங்காய விலை உயர்வுக்கு மத்திய அரசு கூறும் காரணம் வேடிக்கையானது. நாட்டுக்குத் தேவையான வெங்காயம் விளைச்சல் இருக்கிறதா என மத்திய அரசு கண்காணித்து நமக்கு தேவை போக மிச்சத்தை ஏற்றுமதி செய்ய வேண்டும். அதை விட்டு வியாபாரிகள் பதுக்கி வைத்திருக்கிறார்கள் என தவறாக பொறுப்பற்ற முறையில் குறை கூறுவது தேவையற்றது.

தங்க நகைக்கு 10 மாதத்திற்குள் 10 சதவீதம் சேவை வரி உயர்த்தப்பட்டுள்ளது. சேவை வரி என ரூ.86 ஆயிரம் கோடி மத்திய அரசுக்கு செலுத்தியிருக்கிறோம். இதனால் தமிழகத்தில் 21 லட்சம் வியாபாரிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார் அவர்.

விழாவிற்கு வியாபாரிகள் நலச் சங்கத் தலைவர் சோபனம் தலைமை வகித்தார். செயலர் துரைராஜ், துணைத் தலைவர் அஜித்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவை முன்னாள் மாவட்ட ஊராட்சி தலைவர் அஜிதா மனோ தங்கராஜ் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் கிள்ளியூர் எம்.எல்.ஏ. ஜான்ஜேக்கப்,தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்புத் தலைவர் விக்ரமராஜா, மாநிலச் செயலர் ஜோசப்,மாநில செய்தி தொடர்பாளர் பாண்டியராஜன், மாநில பொருளாளர் கோவிந்தராஜுலு, மாநில பொதுச்செயலர் மோகன் ஆகியோர் பேசினர்.

இதில் கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் ததேயூ பிரேம்குமார்,கருங்கல் பேரூராட்சித் தலைவர் எப்சிராணி, மூத்த வழக்கறிஞர் பிளச்சர்,முன்சிறை துணை மின் பொறியாளர் ஐசன்,மத்திகோடு பள்ளி முதல்வர் ஐசக் பால்ராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பு ஊசி போடும் பணி தொடக்கம்

காரைக்காலில் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பு ஊசி போடும் பணி திங்கள்கிழமை தொடங்கியது.

தேசிய கோமாரி நோய் தடுப்புத் திட்டத்தின்கீழ் செப்.23 முதல் அக்.5-ம் தேதி வரை கோமாரி நோய் தடுப்பு ஊசி போடப்படும் என்று கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடைத் துறை அறிவித்திருந்தது இதன்படி, செப். 23 முதல் 25-ம் தேதி வரை காரைக்கால் மற்றும் நெடுங்காடு கொம்யூன் பகுதியிலும், செப். 26 முதல் 28-ம் தேதி வரை நிரவி மற்றும் கோட்டுச்சேரி கொம்யூன் பகுதியிலும், செப் 30 முதல் அக். 1-ம் தேதி வரை திருப்பட்டினம் கொம்யூன் பகுதியிலும், செப். 30, அக். 1 மற்றும் அக். 3-ம் தேதி முதல் 5-ம் தேதி வரை திருநள்ளாறு கொம்யூன் பகுதியிலும் தடுப்பூசி போடும் பணி நடைபெறவுள்ளது.

தினமலர்

## தமிழகம், கேரளாவில் முட்டைவிலை 325 காசுகளாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 325 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதுமுட்டை விலை சரிந்து வருவது ., பண்ணையாளர்களை கவலை அடையச் செய்துள்ளதுநாமக்கல்லில்., தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்,

நேற்று நடந்ததுமுட்டை உற்பத்தி ., மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர்அதையடுத்து ., 335 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, பத்து காசுகள் குறைத்து, 325 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டதுதற்போது., நுகர்வு குறைந்து வருவதால், முட்டை விலையும் குறைந்துள்ளதுஇது ., பண்ணையாளர்களை கவலை அடையச் செய்துள்ளதுநாட்டின் பிற. மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) சென்னை:நிலவரம், 333, பெங்களூரு, 328, மைசூரு, 332, ஹைதராபாத், 308, மும்பை, 340, விஜயவாடா, 317, கோல்கத்தா, 365, பர்வாலா, 305, டில்லி, 319.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதுநாமக்கல்லில்., நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 58 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டதுபல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் . ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், அதன் விலை கிலோ, 52 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

### விவசாயிக்கான பயிற்சி முகாம்

நாமக்கல்: நாமக்கல் அடுத்த எருமப்பட்டி வட்டாரத்தில், விதை கிராமத் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கான பயிற்சி முகாம், எருமப்பட்டி, பெருமாப்பட்டி, வரகூர் ஆகிய கிராமங்களில் நடந்ததுவேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ தலைமை. வகித்தார் . பயிற்சியில், தரமான மற்றும் சான்று பெற்ற விதைகளின் முக்கியத்துவம், அதன் பயன்கள் பற்றி, விதைச்சான்று உதவி இயக்குனர் சுப்ரமணியம் கூறினார்மண் ஆய்வுக்கூட . அலுவலர் சதாசிவம், மண் ஆய்வின் முக்கியத்துவம், மண் மாதிரி எடுக்கும் விதம் குறித்து விளக்கினார்உயிரியல். கட்டுப்பாட்டு ஆய்வக வேளாண் அலுவலர் ராணி, பயிர்களில் தாக்கும் பூச்சி நோய்களை உயிரியல் முறையில் கட்டுப்படுத்தும் முறை பற்றியும், வேளாண் அலுவலர் செல்வி, சிறுதானியம் மற்றும் பயறு வகைப் பயிர்களில் கடைபிடிக்க வேண்டிய சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்தும் பேசினர்உணவு. தானியப்பயிர்களின் முக்கியத்துவம், அதன் உற்பத்தியை அதிகப்படுத்தும் தொழில் நுட்பங்கள் குறித்து, வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ விளக்கினார். இப்பயிற்சியில், 300க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர் .ஏற்பாடுகளை, உதவி வேளாண் அலுவலர்கள் முருகேசன், கண்ணன் ஆகியோர் செய்திருந்தனர்.

## டெல்டா பாசனத்துக்கு கூடுதல் நீர் திறப்புமேட்டூர் அணை நீர்மட்டம் மளமளவென சரிவு

மேட்டூர்: மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்கு கூடுதல் நீர்திறக்கப்பட்டுள்ளதால், நீர்மட்டம் மளமளவென சரிந்து வருகிறதுமேட்டூர். அணையில் இருந்து, டெல்டா பாசனத்துக்கு, ஆண்டுதோறும் ஜூன்,12ல் நீர்திறக்கப்படும்கடந்த ஆண்டு வறட்சி . காரணமாக மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு தாமதமாக நீர்திறக்கப்பட்டதுஇதனால் ., குறுவை பாதித்த நிலையில், பாசன கால்வாய் பகுதிகளில் மட்டும் விவசாயிகள் சம்பா சாகுபடி மேற்கொண்டனர்நடப்பாண்டிலும் டெல்டா . .சாகுபடிக்கு தாமதமாக ஆக, 2ல் நீர்திறக்கப்பட்டதுஇதனால் ., டெல்டா மாவட்டங்களில் விவசாயிகள் சம்பா சாகுபடி கொண்டனர்மேட்டூர் அணை நடப்பாண்டு முழு . கொள்ளளவை எட்டியதால், சம்பா சாகுபடிக்கு முழுமையாக தண்ணீர் கிடைக்கும் என்பதால், டெல்டா கடைமடை பகுதி விவசாயிகளும் ஏராளமான நிலப்பரப்பில் சம்பா சாகுபடியை துவக்கியுள்ளனர்இதனால்., டெல்டா பாசனத்துக்கான நீர்தேவை அதிகரித்ததால் வினாடிக்கு, 18,000 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்திறப்பு, கடந்த, 21ம் தேதி வினாடிக்கு, 20,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டதுஇந்நிலையில்., நீர்பிடிப்பு பகுதியில் பருவமழை தீவிரம் குறைந்ததால், மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று வினாடிக்கு, 4,762 கனஅடியாக சரிந்ததுஇதனால்., அணையின் நீர்மட்டம் நாள் ஒன்றுக்கு, 1.5 டி.சி.எம்., வீதம் மளமளவென சரிகிறது. கடந்த, 15ம் தேதி, 114.090 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று, 108.020 அடியாகவும், 84.307 டி.சி.எம்.,யாக இருந்த நீர் இருப்பு நேற்று, 75.625 டி.சி.எம்.,யாகவும் சரிந்ததுஎட்டு நாளில் அணை நீர்மட்டம்., ஆறு அடியும், நீர் இருப்பு, ஒன்பது டி.சி.எம்.,யும் சரிந்துள்ளது.

## விவசாய பணிகள் ஆரம்பம்

விக்கிரவாண்டிள் விக்கிரவாண்டி பகுதியில் சம்பா பருவ நெல் பயிரிட விவசாய பணிக: .ஆரம்பமாகியது

சம்பா பருவ பட்டத்திற்கு ஏற்ற நெல் வகைகளான ஏ.டி.டி., 36.ஏ.டி.டி .37, ஐ.ஆர்.20, வெள்ளை பொன்னி ஆகிய நெல் வகைகளை பயிரிட விவசாயிகள் நாற்று விட்டு மழைக்காக காத்திருக்கின்றனர்.

நாற்று விட்ட 18 நாட்கள் முதல் 35 நாட்களுக்கு நடவு செய்ய வேண்டும்நடவு நெல் . செய்ய ஏற்ற வகையில் நிலத்தை பதப்படுத்த ஏர் ஓட்டி தண்ணீர் விட்டு சமன் படுத்தி வருகின்றனர்தண்ணீர் . சீரான முறையில் பாசனம் பெற வரப்பு, வாய்க்கால்களை சீரமைக்கின்றனர்.

இந்த பகுதியிலுள்ள விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி திட்டத்தில் நெற் பயிரை சாலை நடவாக பயிரிட்டு வருகின்றனர்.

வரும் தை மாதத்தில் அறுவடை செய்ய ஏற்ற வகையில் நெல் நடவு செய்ய விவசாய பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

விக்கிரவாண்டி, விசாத்தனூர்., குத்தாம்பூண்டி, ஆத்திகுப்பம், ஏழாய், வீடூர் உள்ளிட்ட சுற்றுப்புற கிராமங்களில் விவசாயிகள் நெல் நடவு செய்ய தயாராகி வருகின்றனர்.

## பருவ மழை முன்னெச்சரிக்கை செஞ்சியில் ஆலோசனைக் கூட்டம்

செஞ்சிவடகிழக்கு பருவ மழையின் போது ஏற்படும் அபாயங்களை தடுப்பது குறித்த : ஆலோசனை கூட்டம் செஞ்சி தாசில்தார் அலுவலகத்தில் நடந்தது. ஆ.ஓ.டி., ஜெயச்சந்திரன் தலைமை தாங்கினார்ண்ணியகோட்டி முன்னிலைதாசில்தார் பு . வகித்தார்ஏரிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி ., மதகுகளை சரி செய்வது, மழையின் போது ஏற்படும் வெள்ளம், உடைப்புகளை சரி செய்ய தயார் நிலையில் இருப்பதுமின் ஒயர்கள் ., மின் கம்பங்களை பராமரிப்பது, நோய்கள் பரவாமல் தடுப்பது குறித்து தீர்மானங்கள் இயற்றினர்.

மண்டல துணை தாசில்தார்கள் பூமிநாதன், மெகரூனிசா, நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் பெடலிக்ஸ் செல்வராஜ், பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் சம்பத்குமார், நீர்வள ஆதார பிரிவு உதவி பொறியாளர் வீரமணி, தீயணைப்புத்துறை நிலைய அலுவலர் ராமச் சந்திரன், ஒன்றிய மேலாளர் குலோத் துங்கன், சேகர், பேரூராட்சி இளநிலை உதவியாளர்கள் மருதுபாண்டியன், ஜாபர்கான் கலந்து கொண்டனர்.

## மானாவாரி கம்பு பயிரில் களை செடிகள் அதிகம்

ஆர்ரியில் விதைக் கப்பட்ட கம்பு வயல்களில்வாமானா:பேட்டை.கே., அதிளவில்க களை செடிகள் முளைத்ளுக்கு இடையேககளை செடி .ளனதுள், கம்பு செடிகளை தேடி கண்-பிடு

இதனால் .றனர்கின்டுபமப்யிகள் சிரசாடிக்க விவ, வயிலில் மாடுகளை விட்டு மேய்த்து .றனர்வருகின்

ஆர்பேட்டை அடுத்த.கே., அம்யிகள்சாதியில் உள்ள விவகுப்பம் பகுயார்மை, இரண்டு மாதங்ளுக்குக முன், கம்பு விதைத்பாககுறிப் .னர்த, மோசூர் சாலையில், தொண்-டை நாட்டு அம்மன் கோவில் பகுதியில், 50 ஏக்கர் பரப்ளவில் கம்புப விதைக்.ளதுடுள்பட்கப் தற்போது, இந்த வயல்களை விடகளில் கம்பு செடி, களை செடிகள் அதி-மாக காணப்க .றனபடுகின்

இந்த களை செடிகள், தற்போது, வெண்.றனகின்ளிக்யசிளுடன் காட்கணிற பூக் கம்பு செடிகள் ஆங்.ளனகாங்கே உள்

இதில், கம்பு கதிர்யிகள்சாகளை தேடித் தேடி களைத்து போன விவ, இனி அறுவடை செய்-வதை விட, மாடுகளை விட்டு மேய்த்து விடலாம் என, முடிவு செய்.ளனர்துள்

## கால்நடை பராமரிப்புத்துறையினர் முகாம்13 மாடுகள் கோமாரி நோய் தாக்கி இறப்பு

கரூர்: அருகம்பாளையத்தில் கோமாரி நோய் தாக்கி கடந்த ஒரு வார காலத்தில், 13 மாடுகள் உயிரிழந்துள்ளதை, தொடர்ந்து நேற்று கால்நடை பராமரிப்பு துறை சார்பில் தடுப்பு ஊசி முகாம் நடத்தப்பட்டதுகரூர் அருகம்பாளையத்தில். வசிக்கும் பெரும்பாலானோர் பால் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இங்கு, 400க்கும் அதிகமான மாடுகள் உள்ளது. இங்கிருந்து நாள் ஒன்றுக்கு,1,500 லிட்டருக்கும் அதிகம் பால் உற்பத்தி செய்யப்படுகிறதுஇந்தப் பகுதியில் உள்ள மாடுகளுக்கு கோமாரி நோய். தாக்கியுள்ள காரணத்தால் கடந்த ஒரு வார காலத்தில், 13 மாடுகள் உயிரிழந்துள்ளதுபல . .மாடுகளுக்கு இந்த நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளது பாதிக்கப்பட்ட மாடுகளுக்கு தனியார் கால்நடை மருத்துவர்கள் மூலம் சிகிச்சை அளித்து வருகின்றனர்அந்நோய் தாக்கப்பட்ட . மாடுகளின் குழம்பில், தொற்றுக்கிருமி காரணமாக புண் ஏற்பட்டுள்ளதுஅதுபோல் ., மாடுகளின் வாயிலும் புண் ஏற்படுவதுடன், எச்சிலும் வடிந்து கொண்டே உள்ளதுநோய் . தாக்கப்பட்ட மாடுகள் உணவு எதுவும் சாப்பிடாமல் படுத்த படுக்கையான நிலையில் உள்ளது. பெரும்பாலும், 3 வயதுக்குட்பட்ட மாடுகளுக்கே இந்த நோய் தாக்கியுள்ளது. சிகிச்சை அளித்தாலும் பயன் இல்லாமல் உயிரிழக்கின்றன. பொதுவாக ஒவ்வொரு, மூன்று மாதத்துக்கும் ஒரு முறை கோமாரி நோய் தடுப்பு ஊசி போடப்படுவது வழக்கம்கடந்த ஜூல .ை மாதம் நோய் தடுப்பு ஊசி போடாததால் இந்த

நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளதாக மாடு வளர்ப்போர் குற்றம்சாட்டியுள்ளனர் இந்த ஊரில். அரசு கால்நடை மருத்துவமனை இல்லைஇங்கிருந்து ., எட்டு கிலோமீட்டர் தொலைவில் அரசு மருத்துவமனை உள்ளது நோய் தாக்கிய மாடுகளை அவ்வளவு தொலைவுக்கு . அழைத்துச் செல்ல முடியாததால், பலரும் தனியார் கால்நடை மருத்துவர்கள் மூலம் நோய் தாக்கிய மாடுகளுக்கு சிகிச்சை அளிக்கின்றனர்தகவலறிந்த கால்நடைபராமரிப்புத். துறையினர் நேற்று அருகம்பாளையத்தில் சிறப்பு மருத்துவ முகாம் நடத்தினர். இதில் அங்கு மாடுகளுக்கு இலவச கோமாரி நோய் தடுப்பு ஊசி போடப்பட்டதுஇதுகுறித்து., கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குனர் கோபிநாத் கூறியதாவதுகரூரில் : கடந்த, 15ம் தேதி முதல் ஐந்தாம் கட்ட கால்நடைகளுக்கு நோய் தடுப்பு மருந்துகள் அளிக்கப்பட்டு வருகிறதுஉடனடியாக . அருகம்பாளையத்தில் நோய் தாக்கப்பட்ட பகுதிக்கு, ஆறு குழுக்கள் சென்று பரிசோதனை நடத்தினர்இதில் ., 536 மாடுகளுக்கு தடுப்பு ஊசி அளிக்கப்பட்டதும் கோமாரி நோய் தாக்குதல்ஒரு மாட்டுக்கு மட்டு. கண்டுபிடிக்கப்பட்டு, சிகிச்சை கொடுக்கப்பட்டதுஅருகில் ., வெங்கமேடு பகுதிகளில் மாடுகளுக்கும் பரிசோதனை நடந்தது .இதுமட்டுமல்லமால், 1.76 லட்சம் மதிப்புள்ள தடுப்பு ஊசிகள் கையிருப்பு உள்ளதுஇதனால் ., ஆறு மாதத்துக்கு ஒரு முறை முகாம் நடத்தி, தடுப்பு ஊசி அளிக்கப்படும்.இவ்வாறு அவர் கூறினார்.

## நெல் சாகுபடிக்கு சிறப்பு பயிற்சி

கூடலூர் கூடலூர் தோட்டகலைதுறை சார்பில் நெல் சாகுபடி:குறித்த சிறப்பு பயிற்சி முகாம், புளியாம்பாறையில் உள்ள கோவை வேளாண்மை பல்கலைக் கழக வீரிய ஒட்டு நெல் ஆராய்ச்சி மையத்தில் நடந்தது

இதில், வீரிய ஒட்ட நெல் ஆராய்ச்சி மையத்தின் உதவி பேராசியர் டாக்டர் தேவானந்த் பேசுகையில், ""வீரிய ஒட்டு நெல் விதைகளை விதைத்த 15 நாட்களில் நாற்றுகள் நடவு தயாராகி விடும். நெல் நாற்றுகள் பறித்த உடன் நடவு செய்வது வேண்டும் நாற்றுகளை . 25 சதுர செ.மீ., இடைவெளி விட்டு நடவு செய்ய வேண்டும்நெல் நடவு செய்யப்பட்ட . வயல்களில் அதிகளவில் நீர் தேக்காமல், 2 செ.மீ., உயரத்தில் நீர் தேக்கி இருக்கும் படி பார்த்து கொள்ள வேண்டும்இதன் மூலம் ., எக்டருக்கு வழகத்தை விட 3 டன் வரை மகசூல் அதிகம் கிடைக்கும்," என்றார்.

தொடர்ந்து, நெல் நடவு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு, கள பயிற்சி வழங்கப்பட்டது. முகாமுக்கு தோட்ட கலை துறை உதவி இயக்குனர் சிபிலாமேரி தலைமை வகித்தார். முகாமில், துணை தோட்டகலை அலுவலர் சந்திரன், உதவி வேளாண்மை அலுவலர்கள் சரவணன், கோகுல்நாதன், வினோத், அம்பிராஜ் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

வீரிய ஒட்டு நெல் விதைகளை விதைத்த 15 நாட்களில் நாற்றுகள் நடவு தயாராகி விடும் . நெல் நாற்றுகள் பறித்த உடன் நடவு செய்வது வேண்டும்நெல் நடவு செய்யப்பட்ட . வயல்களில் அதிகளவில் நீர் தேக்காமல், 2 செ.மீ., உயரத்தில் நீர் தேக்கி இருக்கும் படி பார்த்து கொள்ள வேண்டும். இதன் மூலம், எக்டருக்கு வழகத்தை விட 3 டன் வரை மகசூல் அதிகரிக்கும்.

## ஏரலில் வரும் 29ல் விவசாயிகள் வாழ்வாதார விழிப்புணர்வு மாநாடு

தூத்துக்குடிவிவசாயிகள்: வாழ்வாதார விழிப்புணர்வு மாநாடு வரும் 29ம் தேதி ஏரலில் நடக்கிறதுஇதில் . வைகோ, நல்லகண்ணு ஆகியோர் பங்கேற்கின்றனர்இதில் . விவசாயிகள் திரளாக பங்கேற்க வேண்டும் என்று அழைப்பு விடப்பட்டுள்ளதுஇது . குறித்து தாமிரபரணி நதிநீர் பாதுகாப்பு பேரவை தலைவர் நயினார் குலசேகரன் தெரிவித்திருப்பதாவது :தூத்துக்குடி மாவட்ட தாமிரபரணி பாசனத்தில் உள்ள 46 ஆயிரத்து 107 ஏக்கர் சாகுபடி நிலங்களின் பிரதான பொது கோரிக்கைகளை வலியுறுத்தியும், அதனை முதல்வரின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் தூத்துக்குடி மாவட்ட தாமிரபரணி நதிநீர் பாதுகாப்பு பேரவை சார்பில் விவசாயிகள் வாழ்வாதார விழிப்புணர்வு மாநாடு நடக்கிறது வரும்.29ம் தேதி ஞாயிற்றுகிழமை மாலை 4 மணிக்கு ஏரல் ராசி திருமண மண்டபத்தில் மாநாடு எனது தலைமையில் நடக்கிறது. பேரூர் சிவஞானவேல் வரவேற்கிறார் விவசாயி .சம்பத் துவக்கி வைக்கிறார். மாநாட்டில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் நல்லகண்ணு மற்றும் விவசாய சங்க முக்கிய நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்மாநாடு. சம்பந்தமாக மாநாட்டு குழுவினர் கடந்த 18ம் தேதி முதல் 21ம் தேதி வரை தூத்துக்குடி மாவட்ட தாமிரபரணி பாசனத்தில் உள்ள சுமார் 100 கிராமங்களில் மாநாடு குறித்த சுமார் 5 ஆயிரம் விளக்க துண்டு பிரசுரங்கள் கொடுக்கப்பட்டு சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட

விவசாயிகளையும் நேரில் சந்தித்து மாநாடு குறித்த விளக்க பிரசாரம் செய்யப்பட்டது . இதனால் சுமார்3 ஆயிரம் விவசாயிகள் மாநாட்டில் பங்கேற்பர் என்று எதிர்பார்க்கிறோம்தூத்துக்குடி. மாவட்டத்தில் 46 ஆயிரத்து 107 ஏக்கர் நிலத்திற்கும் கார் மற்றும் பிசானம் ஆகிய இருபோக சாகுபடிக்கு தண்ணீர் உத்தரவாதம் வேண்டும் என்று மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.20 எம் டி.ஜி.திட்டம், 4வது பைப்லைன் திட்டம் போன்றவை தாமிரபரணி விவசாயத்தை முழுவதுமாக பாதித்து விடும் என்பதால் அந்த திட்டங்களை கண்டித்தும், அதனை நிறுத்த வலியுறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட உள்ளன.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## காளான் வளர்ப்பு பயிற்சி

திருப்புத்தூர்திருப்புத்தூர் : ,பிள்ளையார்பட்டியில் பஞ்சாப் நேஷனல் வங்கியின்,உழவர் பயிற்சி மையத்தில், செப்.,27ல் இலவசமாக காளான் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது . புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த, முன்னோடி விவசாயி பயிற்சி அளிக்க உள்ளார். இந்த ஒரு நாள் பயிற்சி,காலை 10 மணிக்கு துவங்கி, மாலை 5 மணி வரை நடைபெறும்ஆண்.,பெண் இருபாலாரும் பங்கேற்கலாம்கல்வித் தகுதி.,வயது தடையல்ல . : முன் பதிவு செய்ய99416 47893 எண்ணைத் தொடர்பு கொள்ளலாம்.

## திசு வாழை சாகுபடி விவசாயிகள் மானியம் குறைத்து வழங்குவதால் புலம்பல்

கம்பம் சாகுபடியோ ஆயிரம் :ஹெக்டேரை தாண்டிய நிலையில், மானியமோ 50 ஹெக்டேருக்கு வழங்கப்படுவதால், திசு வாழை சாகுபடி விவசாயிகள் புலம்பி வருகின்றனர்.

தேனி மாவட்டத்தில் வாழை, திராட்சை, மா, கொய்யா உள்ளிட்ட தோட்டக்கலை சாகுபடி அதிக பரப்பில் நடக்கிறது.

தோட்டக்கலை மாவட்டம் என்ற பெயரை தேனி பெற்றுள்ளதுதோட்டக்கலைத்துறை . சார்பில், தேசிய தோட்டக்கலை இயக்கம், மத்திய மாநில அரசுகள் சார்பில், பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, தோட்டக்கலை பயிர்கள் மற்றும் காய்கறி சாகுபடியில் சாதனை படைக்க, அதிகாரிகள் முயற்சி செய்து வருகின்றனர். மாவட்டத்தில், தென்னையில் ஈரியோபைடு நோய் தாக்கியுள்ளதால், அதிக எண்ணிக்கையில் தென்னை மரங்களை வெட்டி விட்டு, வாழை சாகுபடியில்

இறங்கியுள்ளனர். அதுவும் திசு வாழை சாகுபடியில், விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கம்பம் பகுதியில் காமயகவுண்டன்பட்டி, நாராயணத்தேவன்பட்டி, சுருளிப்பட்டி, கருநாக்கமுத்தன்பட்டி, குள்ளப்பகவுண்டன்பட்டி, கூடலூர், புதுப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் திசு வாழை சாகுபடி, 1000 ஹெக்டேரை தாண்டியுள்ளது. திசு வாழை சாகுபடி விவசாயிகளுக்கு, வாழை கன்றுகள் வாங்க தோட்டக்கலைத்துறை மானியம் வழங்குகிறது .1.25 ஹெக்டேர் பரப்பிற்கு ஒரு விவசாயிக்கு ரூ .31 ஆயிரத்து 200 வழங்கப்படுகிறதுநிலத்தின் சிட்டா . அடங்கல், வாழைக்கன்று வாங்கியதற்கான பில்லை சமர்ப்பித்தால், மானியம் வழங்கப்படும்.

கம்பம் பகுதிக்கு, மொத்தமே 50 ஹெக்டேருக்கு மட்டும் மானியம் வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது .1000 ஹெக்டேருக்கு மேல் திசு வாழை சாகுபடிசெய்துள்ளதால், விவசாயிகள் மானியம் கேட்டு, தோட்டக்கலைத்துறை அதிகாரிகளை நச்சரித்து வருகின்றனர்கொடுப்பது யாருக்கு ., யாரை விடுவது, என்று தெரியாமல், தோட்டக்கலைத்துறையினர் ஓட்டம் பிடிக்கின்றனர். விவசாயிகள் கூறுகையில், " அரசு திசு வாழைக்கு வழங்கும் மானியத்தை 500 ஹெக்டேருக்காவது வழங்க வேண்டும்' என்றனர்.

## "மலிவு விலை' அம்மா உணவகத்துக்குவிவசாய தொழிலாளர் சங்கம் வரவேற்பு

தஞ்சாவூர்: தமிழகத்தில், முதல்வர் ஜெ., அமல்படுத்திய மலிவு விலையில் உணவை வழங்கும் அம்மா உணவக திட்டத்துக்கு விவசாய தொழிலாளர் சங்க அகில இந்திய பொதுச்செயலாளரும், முன்னாள் எம்.பி.,யுமான நாகேந்திரநாத் வரவேற்பு தெரிவித்துள்ளார்தஞ்சையில்., இந்திய கம்யூ., கட்சி அலுவலகத்தில் விவசாய தொழிலாளர் சங்க அகில இந்திய பொதுச்செயலாளரும் முன்னாள் எம்.பி.,யுமான நாகேந்திரநாத் ஓசா நேற்று நிருபர்களுக்கு அளித்த பேட்டிதேசிய ஊரக: வேலையுறுதி திட்டத்தில் தொழிலாளருக்கு பணி வழங்கும் நாட்களை ஆண்டுக்கு 200 நாட்களாகவும், கூலியை 300 ரூபாயாகவும் உயர்த்தி வழங்க வேண்டும்இந்தியாவில்., தேசிய வேலையுறுதி திட்டத்தில், அடையாள அட்டைகளை 12 கோடி தொழிலாளர் பெற்றுள்ளனர்ஆனால் ., இதில், ஒரு கோடியே, 16 லட்சம் தொழிலாளர் மட்டுமே

வேலைவாய்ப்பை பெறுகின்றனர்அதாவது ., மொத்த தொழிலாளர் எண்ணிக்கையில் வெறும் 3.3 சதவீதம் பேர் மட்டுமே திட்டத்தின் பயனை பெறுகின்றனர்மற்றவர்களுக்கு . அனைத்து தொழிலாளரும் .வேலை கிடைப்பதில்லை திட்டப்பயன்களை முழுமையாக பெறும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்தற்போது., நமது நாட்டில் ஒரு குடிமகனுக்கு, உணவுக்கு மாதம் 5 கிலோ அரிசி அல்லது கோதுமை கிடைக்கிறது . ஆனால், இது போதாதுமத்திய அரசு . அமல்படுத்தியுள்ள உணவு பாதுகாப்புச் சட்டத்தில், ஒரு குடிமகனுக்கு, மாதம் 14 கிலோ அரிசி அல்லது கோதுமை வழங்க உத்தரவாதம் அளிக்க வேண்டும்வறுமை . கோட்டுக்கு கீழ் உள்ள அனைவருக்கும் இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க வேண்டும்து பெருகிவரும் நகரமயமாதலில் தற்போ. தொழிலாளர்கள் நகரங்களுக்கு குடிபெயர்ந்து வசிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர்இ.வர்கள் உணவுத்தேவையை பூர்த்தி செய்வதற்காக, தமிழகத்தில் மாநகராட்சிகளில், "அம்மா' உணவகங்கள் திட்டத்தை முதல்வர் ஜெ., அமல்படுத்தியுள்ளார்தில்இத்திட்டத் . உணவகங்கள் திறக்கப்பட்டு, மலிவுவிலையில் உணவு அளிக்கப்படுகிறதுஇத்திட்டம். தொழிலாளர்களுக்கு மிகவும் பயன் அளிக்கக்கூடியதுஅதனால் ., தமிழகத்தை முன்னுதாரணமாக கொண்டு மற்ற மாநிலங்களிலும் மலிவுவிலை உணவக திட்டத்தை அமல்படுத்த வேண்டும்இவ்வாறு., அவர் கூறினார்துஅப்போ., விவசாய தொழிலாளர் சங்க மாநில பொருளாளர் சந்திரகுமார், இந்திய கம்யூ., டில்லி செயலாளர் நிர்மல், உலகநாதன் எம்.ஏ.எல்., இந்திய கம்யூ., மாவட்ட செயலாளர் திருஞானம், ஏ.சி.யு.டி.ஐ., குடந்தை அரசு போக்குவரத்துக்கழக பொதுச்செயலாளர் மதிவாணன், முன்னாள் எம்.ஏ.எல்., பெரியசாமி உள்பட பலர் உடனிருந்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## விவசாயிகள், தொழிலாளர்களுக்கு ஓய்வூதியமாக ரூ.3 ஆயிரம் வழங்க வேண்டும் இந்திய கம்யூனிஸ்டு கட்சி கூட்டத்தில் தீர்மானம்




விவசாயிகள், விவசாய தொழிலாளர்களுக்கு ஓய்வூதியமாக ரூ.3 ஆயிரம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து இந்திய கம்யூனிஸ்டு கட்சி கூட் டத்தில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

**மாவட்ட குழு கூட்டம்**

புதுக்கோட்டை மாவட்ட இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட குழுக் கூட்டம் கட்சி அலுவலகத்தில் பெரி.குமாரவேல் தலைமை யில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில நிர்வாக குழு உறுப்பினர் ஜெ.லெட்சுமணன் அரசியல் மற்றும் மாநில நிர்வாக குழு முடிவுகள் குறித்து விளக்கி பேசினார். மாவட்ட செயலாளர் த.செங்கோடன் நடந்துள்ள கட்சி வேலைகள் குறித்த அறிக்கை சமர்ப்பித்தார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் கே.ஆர்.தர்மராஜன், வீ.சிங்கமுத்து, கே.எஸ்.அழகர்சாமி, மாவட்ட துணை செயலாளர், ஏனாதிராசு,

பொருளாளர் திருநாவுக்கரசு, ராமச்சந்திரன் மற்றும் முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு;-

**ஓய்வூதியம்**

விவசாயத்தை பாதுகாக்க விவசாயிகள், விவசாய தொழிலாளர்களுக்கு ஓய்வூதியமாக ரூ.3 ஆயிரம் வழங்க வேண்டும். பெண்கள் மற்றும் தலித் உரிமைகள் பாதுகாத்திட வலியுறுத்தி அக்டோபர் 5-ந் தேதி நடைபெறும் நாடு தழுவிய மறியல் போராட்டத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் 11 ஒன்றியங்களில் 5 ஆயிரம் பேர் பங்கேற்பது.

நிலமோசடி மற்றும் நில குத்தகை விவசாயிகள் பதிவு செய்யும் சட்டத்தை கடைபிடித்து, நியாயம் வழங்கிடசட்டரீதியான நடவடிக்கை எடுக்க மாவட்ட நிர்வாகத்தை கேட்டுக் கொள்வது என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.25 லட்சத்துக்கு விவசாய விளை பொருட்கள் விற்பனை



அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.25 லட்சத்துக்கு விவசாய விளை பொருட்கள் விற்பனை ஆனது.

விவசாய விளை பொருட்கள் ஏலம்

அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நேற்று விவசாய விளை பொருட்கள் ஏலம் நடைபெற்றது. இதற்கு அந்தியூர், எண்ணமங்களம், அத்தாணி, வெள்ளித்திருப்பூர், ஒலகடம், ஆப்பக்கூடல் மற்றும் கர்நாடக மாநிலம் ராமாபுரம், வேலாம்பட்டியில் இருந்தும் விவசாய விளைபொருட்களை விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வந்து இருந்தனர்.

ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சுப்புராமன் முன்னிலையில் ஏலம் நடைபெற்றது. பருத்தி ஏலத்துக்கு ஆயிரத்து 100 மூட்டைகள் பருத்தி விற்பனைக்காக கொண்டு வரப்பட்டு இருந்தது. அவற்றில் பி.டிரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு குறைந்தபட்ச விலையாக ரூ.5 ஆயிரத்து 100–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.5 ஆயிரத்து 750–க்கும், கொட்டு ரக பருத்தி குறைந்தபட்ச விலையாக குவிண்டால் ஒன்று 2 ஆயிரத்து 500 ரூபாய்க்கும், அதிகபட்சவிலையாக 3 ஆயிரத்து 100 ரூபாய்க்கும் என மொத்தம் ரூ.15 லட்சத்துக்கு பருத்தி விற்பனையானது.

<u>கொப்பரை தேங்காய்</u>

தேங்காய் ஏலத்துக்கு 40 ஆயிரம் தேங்காய்கள் கொண்டு வரப்பட்டு இருந்தது. இதில் சிறிய தேங்காய் ஒன்று 4 ரூபாய் 20 காசுக்கும், பெரிய தேங்காய் ஒன்று 9 ரூபாய் 30 காசுக்கும் என மொத்தம் ரூ.3 லட்சத்து 10 ஆயிரத்துக்கு விற்பனையானது.

கொப்பரை தேங்காய் 150 மூட்டைகள் கொண்டு வரப்பட்டிருந்தது. இதில் குவிண்டால் குறைந்தபட்சவிலையாக 5 ஆயிரத்து 299 ரூபாய்க்கும், அதிகபட்சவிலையாக ரூ.5 ஆயிரத்து 100–க்கும் என மொத்தம் ரூ.3 லட்சத்து 25 ஆயிரத்துக்கு விற்பனையானது.

<u>நிலக்கடலை</u>

மக்காச்சோளம் 100 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தது. இது குவிண்டால் ஒன்று குறைந்தபட்சவிலையாக ஆயிரத்து 501 ரூபாய்க்கும், அதிகபட்சவிலையாக ஆயிரத்து 581 ரூபாய்க்கும் விற்பனையானது. மொத்தம் ரூ.1 லட்சத்து 50 ஆயிரத்துக்கு விற்பனையானது.

நிலக்கடலை 150 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தது. இதில் பச்சை நிலக்கடலை குவிண்டால் ஒன்று குறைந்தபட்சவிலையாக ஆயிரத்து 706 ரூபாய்க்கும், அதிகபட்சவிலையாக 3 ஆயிரத்து 100 ரூபாய்க்கும், காய்ந்த நிலக்கடலை குவிண்டால் ஒன்று குறைந்தபட்சவிலையாக ரூ.3 ஆயிரத்துக்கும், அதிகபட்சவிலையாக 3 ஆயிரத்து 919 ரூபாய்க்கும் என மொத்தம் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானது.

<u>ரூ.25 லட்சத்துக்கு விற்பனை</u>

எள் 50 மூட்டைகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டு இருந்தது. இதில் வெள்ளை எள் குவிண்டால் ஒன்று குறைந்தபட்சவிலையாக 8 ஆயிரத்து 981 ரூபாய்க்கும்,

அதிகபட்சவிலையாக 10 ஆயிரத்து 289 ரூபாய்க்கும் என மொத்தம் ரூ.50 ஆயிரத்துக்கு விற்பனையானது.

ஆமணக்கு 10 மூட்டைகள் கொண்டுவரப்பட்டு இருந்தது. இது குவிண்டால் ஒன்று ரூ.3 ஆயிரத்து 745–க்கும் விற்பனையானது. அனைத்து விவசாய விளை பொருட்களும் ரூ.25 லட்சத்துக்கு விற்பனையானது. ஏலம் விடப்பட்ட விவசாய விளை பொருட்களை நாமக்கல், சேலம், திருப்பூர், மேட்டுப்பாளையம், விருதுநகர் ஆகிய பகுதிகளில் இருந்து வந்திருந்த வியாபாரிகள் வாங்கிச்சென்றனர்.

## வெள்ளகோவிலில் கீழ்பவானி விவசாயிகள் சங்க ஆலோசனை கூட்டம்



வெள்ளகோவில்,

வெள்ளகோவிலில் கீழ் பவானி விவசாயிகள் சங்க ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு விவசாயிகள் நலச்சங்க செயலாளர் எம்.எஸ்.இளங்கோ தலைமை தாங்கினார். தலைவர் நல்லசாமி, செயலாளர்கள் கோபிநாத், தங்கராசு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

**கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:–**

பவானிஅணையில் இருந்து பாசனம் பெறும் அனைத்து வாய்க்கால்களுக்கும் ஒரே நேரத்தில் தண்ணீர் திறந்து விடவேண்டும். கீழ் பவானி பாசன வாய்க்காலில் காங்கிரீட் தளம் அமைக்கும் திட்டத்தை கைவிட வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தினகரன்

## வரத்து அதிகரிப்பால் காய்கறி விலை சரிவு

மதுரை, : காய்கறிகளின் வரத்து அதிகரிப்பால் மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் விலை குறைந்துள்ளது.

கொடைக்கானல் பகுதியில் இருந்து பீட்ரூட், கேரட், உருளை போன்ற காய்கறிகளும், தேனி, கம்பம், ஒட்டன்சத்திரம் பகுதிகளில் இருந்து தக்காளி, பெங்களூரில் இருந்து குடைமிளகாய், முட்டைகோஸ், பச்சைமிளகாய் போன்றவையும் உடன்குடி மற்றும் தேனி மாவட்டத்திலிருந்து முருங்கைகாய், செட்டியபட்டி, உசிலம்பட்டி போன்ற பல் வேறு பகுதிகளில் இருந்து கத்தரிக்காய், தக்காளி, வெண்டைக்காய் உள் ளிட்ட நாட்டு காய்கறிகள் அதிகளவில் மதுரை சென் ட்ரல் மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வருகின்றன. இந்த வகை காய்கறிகள் வரத்து தற்போது அதிகரித்துள்ளது. கடந்த வாரங்களில் கிலோ ரூ.25க்கு விற்பனையான வெண்டைக்காய் நேற்று ரூ.15க்கும், ரூ.30க்கு விற்பனையான நுக்கல், பீட்ரூட் ரூ.10க்கும், நாட்டு தக்காளி மற்றும் பெங்களூர் தக்காளி ரூ.10க்கும், ரூ.25க்கு விற்பனையான முள்ளங்கி ரூ.10க்கும், ரூ.50க்கு விற்ற பச்சை மிளகாய் ரூ.25க்கும், ரூ.70க்கு விற்ற சிறிய பாகற்காய் ரூ.60க்கும் விற்பனையானது. பாவூர் மற்றும் ஆந்திராவில் இருந்து பச்சை மிளகாய் வரத்து அதிகரித்துள்ளதால் அதன் விலை குறைந்துள்ளது. லேசான சாரல் மழை மற்றும் பனிமூட்டம் காரணமாக கத்தரிக்காயில் பூச்சி தாக்குதல் காரணமாக விளைச்சல் குறைந்தது. கத்தரிக்காய் வரத்து குறைந்ததால் இதன் விலை சற்று அதிகரித்துள்ளது. நல்ல தரமான பல்லாரி ரூ.65 முதல் 70 வரையிலும், சின்னவெங்காயம் ரூ.55 வரையிலும் விற்பனையாகிறது. வெங்காயம் மட்டுமே விலை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. மாட்டுத்தாவணி அனைத்து கட்டிடக்கடை வியாபாரிகள் நலச்சங்க செயலாளர் தியாகராஜன் கூறுகையில், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் காய்கறிகளின் அறுவடை நடைபெற்று வருகிறது. அதனால் விலை குறைய துவங்கி உள்ளது. புரட்டாசி மாதத்தில்

திருவிழாக்களும், முகூர்த்தங்களும் இல்லாததால் காய்கறிகளின் தேவை குறைவு. வரத்து அதிகரித்துள்ளதால் விலை குறைந்துள்ளது. வெங்காயத்தை தவிர்த்து மற்ற காய்கறிகளின் விலைகள் மக்களுக்கு சாதகமாகவே உள்ளன. அதிகளவில் மிச்சம் ஏற்படுகிறது. இந்த நிலை புரட்டாசி மாதம் முழுவதும் நீடிக்கும் என்றார்.

## காய்கறி விலை சரிவு மக்கள் மகிழ்ச்சி

கோவை, : கோவையில் தினசரி சந்தை மற்றும் உழவர் சந்தைகளுக்கு காய்கறிகளின் வரத்து அதிகரித்துள்ளதால் விலை குறைந்துள்ளது. கோவையில் விநாயகர் சதுர்த்தி மற்றும் ஓணம் பண்டிகையொட்டி காய்கறிகள் விலை கடும் விலையேற்றத்துடன் காணப்பட்டது. இதனால் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டனர். இந்நிலையில் பண்டிகை முடிவடைந்த நிலையில் காய்கறிகளின் விலைகள் மீண்டும் இயல்நிலைக்கு திரும்புகிறது. கடந்த சில நாட்களாகவே கோவை உழவர் சந்தை மற்றும் தினசரி சந்தைகளுக்கு காய்கறிகளின் வரத்து அதிகமாகியுள்ளதால் விலை குறைந்துள்ளது. இதனால் ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். வெங்காயத்தின் விலை மட்டும் ஏறுமுகமாக உள்ளதால் மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். இதுகுறித்து மார்க்கெட் வியாபாரி ஒருவர் கூறுகையில்“, தற்போது கோவை சந்தைகளுக்கு பல்வேறு மாநிலங்களிலிருந்து காய்கறி வரத்துகள் அதிகமாக உள்ளது. கடந்த வாரத்தில் 1 கிலோ பச்சை மிளகாய் ரூ.45 முதல் ரூ.50 வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது ரூ.15 முதல் ரூ.20 வரை விற்பனை செய்யப்படுகிறது. ஒவ்வொரு காய்கறிகளுக்கும் ரூ.10 முதல் ரூ.15 வரை விலை குறைந்துள்ளது. வெங்காயத்தின் விலைதான் அதிகமாகி உள்ளது’’ என இவ்வாறு கூறினார்.

## ஆத்தூர் கூட்டுறவு சங்கத்தில் 2 ஆயிரம் மூட்டை மஞ்சள் ரூ80 லட்சத்திற்கு விற்பனை

ஆத்தூர், : ஆத்தூரில் உள்ள வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்தில் 2 ஆயிரம் மூட்டை மஞ்சள் ரூ80 லட்சத்திற்கு விற்பனையானது.

சேலம் மாவட்டம், ஆத்தூர் புதுப்பேட்டையில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தில் வாரம்தோறும் சனிக்கிழமை இரவில் மஞ்சள் ஏலம் நடப்பது வழக்கம். இந்த ஏலத்தில் ஆத்தூர்,

கள்ளக்குறிச்சி, விழுப்புரம், பெரம்பலூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வருவது வழக்கம்.
இதை சேலம், ஈரோடு, நாமக்கல், கோவை, திருப்பூர் உள்ளிட்ட பகுதியை சேர்ந்த வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். நேற்று முன்தினம் இரவு நடந்த ஏலத்தில் 400 விவசாயிகள் கொண்டு வந்த 2 ஆயிரம் மூட்டை மஞ்சள், ரூ80 லட்சத்திற்கு விற்பனையானது.
இந்த வார விற்பனை விலை விபரம் வருமாறு:

விரலி ரகம் குவிண்டால் ஒன்று ரூ4089 முதல் ரூ7019 வரையிலும், உருண்டை ரகம் ரூ3889 முதல் ரூ5509 வரையிலும், பனங்காளி ரகம் ரூ8709 லிருந்து ரூ13,779 வரையிலும் விற்பனையானது.
கடந்த வாரத்திற்கு முந்தைய வாரத்தில் விற்பனை விலை விபரம்: விரலி ரகம் குவிண்டால் ஒன்று ரூ4579 முதல் ரூ6519 வரையிலும், உருண்டை ரகம் ரூ3879 முதல் ரூ5629 வரையிலும் பனங்காளி ரகம் ரூ5669லிருந்து ரூ16,800வரையிலும் விற்பனையானது. கடந்த வாரத்திற்கு முந்தைய வாரத்தை விட இந்த வாரம் விரலி ரக மஞ்சளுக்கு ரூ500 வரையில் அதிக விலை கிடைத்தது. அதேபோல் உருண்டை ரகத்திற்கு ரூ100ம், பனங்காளி ரகத்திற்கு ரூ3 ஆயிரம் வரையிலும் விலை குறைவாக கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## தேன்கனிக்கோட்டையில் எள் கிலோ ரூ80ஆக உயர்வு

தேன்கனிக்கோட்டையில் எள் கிலோ ரூ80 ஆக விலை உயர்ந்துள்ளது.
கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை பகுதியில் சுமார் 200 ஹெக்டேர் பரப்பில் விவசாயிகள் எள் சாகுபடி செய்துள்ளனர். போதிய மழை இல்லாததால் எள் விளைச்சல் குறைவாகவே உள்ளது. இதனால் சந்தைக்கு வரத்து குறைவாகவே உள்ளது. எள் வரத்து குறைந்ததால் கெலமங்கலம் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் விற்பனை சங்கத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் நடக்கும் எள் ஏலம் நான்கு வாரங்களிலேயே நிறுத்தப்பட்டது.

கடந்த சில வாரங்களில் கருப்பு எள் கிலோ ரூ61 முதல் ரூ65 வரையும், சிகப்பு எள் ரூ65 முதல் ரூ70 வரையும் இருந்தது. இந்த வாரம் கருப்பு எள்ளின் விலையில் மாற்றமில்லாமல், அதே விலை உள்ளது. சிகப்பு எள் கிலோ ரூ75 முதல் ரூ80 ஆக விலை உயர்ந்துள்ளது.

இந்த ஆண்டு போதிய மழையில்லாததால் எள் விளைச்சல் குறைந்துள்ளது. தேவை அதிகமாக உள்ள நிலையில் சந்தைக்கு வரத்து குறைவாக உள்ளதால் எள் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## இனக்கவர்ச்சி பொறி மூலம் கத்தரியில் காய்ப்புழு, தண்டுப்புழுவை கட்டுப்படுத்த செயல்விளக்கம்

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி அருகே இனக்கவர்ச்சி பொறி மூலம் கத்தரியில் காய்ப்புழு மற்றும் தண்டுப்புழு கட்டுப்படுத்தும் முறை குறித்து வேளாண் கல்லூரி மாணவிகள் விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளித்தனர். கிருஷ்ணகிரி அடுத்த போகனப்பள்ளி கிராமத்தில் வேலூர் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை கல்லூரி மாணவிகள் கலைச்செல்வி, சௌதாமணி, சுபித்ரா, ஹனி, காவிய அபிநயா, அஞ்சனா, சௌ மியா ஆகியோர் கொண்ட குழுவினர் முகாமிட்டு, அதன் சுற்றுவட்டார பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு பல்வேறு பயிற்சிகளை அளித்து வருகின்றனர். அதன்படி கிருஷ்ணகிரி அடுத்த கள்ளியூர் கிராமத்தில் வேளாண் பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் இனக்கவர்ச்சி பொறி மூலம் கத்தரியில் காய்ப்புழு மற்றும் தண்டுப்புழு கட்டுப்படுத்தும் முறை குறித்து விவசாயிகளுக்கு அந்த மாணவிகள் செயல்விளக்கம் அளித்தனர்.

## திருந்திய நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெறலாம் வேளாண்துறை ஆலோசனை

சிவகங்கை, : திருந்திய நெல் சாகுபடி முறையில் விவசாயிகள் பயிர் சாகுபடி செய்தால் அதிக மகசூல் பெறலாம் என வேளாண் துறை ஆலோசனை வழங்கியுள்ளது. இதுகுறித்து சிவகங்கை வட்டார வேளாண் உதவி இயக்குநர் தனபாலன் கூறியதாவது: திருந்திய நெல் சாகுபடி முறையில் குறைவான அளவு நீர், விதை போதுமானது. மேலும் நோய் தாக்குதல், சாகுபடி செலவு, வேலையாட்களின் எண்ணிக்கையும் குறைவே. இந்த முறையில் மண் பரிசோதனை முடிவு அடிப்படையில் உரமிட வேண்டும். இந்த முறையில் சாகுபடி செய்தால் 40 சதவீதம் வரை அதிக மகசூல் பெறலாம். விவசாயிகளுக்கான ஆயில் இன்ஜின், கைத்தெளிப்பான், விசை தெளிப்பான், களை எடுக்கும் கருவிகள் வேளாண் அலுவலகத்தில் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. மானிய முறையில் வழங்கப்பட உள்ள இக்கருவிகளை பெற சிவகங்கை வட்டார வேளாண் அலுவலகத்தை விவசாயிகள் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## விவசாயிகள் கவனத்திற்கு...!

இளையான்குடி, : விவசாயிகளின் நலன் கருதி மழைநீரை சேமிக்கவும், பயிர்களுக்கு உரிய நேரத்தில் தண்ணீர் பாய்ச்சவும், மீன் வளர்க்கவும், பண்ணைகுட்டை திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதனடிப்படையில் இளையான்குடி ஒன்றியம் முழுவதும் ஆண்டிற்கு 470 பண்ணைகுட்டை வெட்ட திட்டமிடப்பட்டுள்ளது. பண்ணைகுட்டை வெட்ட விருப்பமுள்ள விவசாயிகள் 10(1)அடங்கள், சிறு, குறு விவசாயிகளுக்கான சான்று, ரேஷன் கார்டு, எப்எம்பி, ஊரக வேலை வாய்ப்பு திட்ட அட்டை ஆகியவற்றின் நகலுடன் இளையான்குடி வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் நேரடியாக தங்களது பெயரை பதிவு செய்துகொள்ளலாம் என வேளா ண்மை விரிவாக்க மையம் அறிவுறுத்தப்படுகிறது.

## ஏனாத்தூர் உழவர் பயிற்சி மையத்தில் நாளை முயல் வளர்ப்பு பயிற்சி

காஞ்சிபுரம், : காஞ்சிபுரம் உழவர் பயிற்சி மையத்தின் தலைவர் வெங்கட சுதாகர் ராவ் வெளியிட்டுள்ள அறிக்கை:

காஞ்சிபுரம் ஏனாத்தூரில் உள்ள உழவர் பயிற்சி மையத்தில், முயல் வளர்ப்பு பற்றிய ஒரு நாள் பயிற்சி முகாம் நாளை காலை 10 மணிக்கு நடக்கிறது. கால்நடை பண்ணை தொழில்களில் முயல் வளர்ப்பு லாபகரமான தொழிலாகும். நார்ச்சத்து மிகுந்த தாவரம், வீடுகளில் விளையும் காய்கறிகளை முயல்கள் உண்ணுவதால் புரத சத்து மிகுந்த இறைச்சியாகும். குறைந்த இடத்தில் குறைந்த முதலீட்டில் எளிய பராமரிப்பில் முயல் வளர்க்கலாம். ரத்த கொதிப்பு, இதய நோய்களுக்கு முயல் கறி நல்லது. ஆகவே, விருப்பமுள்ள விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்.

மேலும், தலைவர், உழவர் பயிற்சி மையம், ஏனாத்தூர், காஞ்சிபுரம்-631 561 மற்றும் 044 2726 4019 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு பயன்பெறும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## விதை உற்பத்தியாளர்கள் தரம் அறிந்து விதை குவியலுக்கு சான்று அட்டைகள் பொருத்த வேண்டும் உதவி இயக்குனர் தகவல்

திருவண்ணாமலை, :விதை உற்பத்தியாளர்கள் விதை குவியலுக்கு சான்றட்டைகள் பொருத்த வேண்டும் என விதைச்சான்று உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார். திருவண்ணாமலை விதைச்சான்று உதவி இயக்குனர் சு.பேபிபர்வதம் ஒரு அறிக்கை விடுத்துள்ளார். அதில் அவர் கூறி இருப்பதாவது:

திருவண்ணாமலை மாவட்ட அரசு மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்கள் தங்கள் விதை சுத்தி நிலையத்தில் சுத்தி செய்து இருப்பு வைக்கப்பட்டுள்ள நெல், மணிலா மற்றும் பயறு விதைக்குவியலுக்கு தரத்தினை நிர்ணயம் செய்ய விதை மாதிரி எடுத்து விதை பரிசோதனை நிலையத்தில் ஆய்வு செய்து முடிவுகள் வரப்பெற்றவுடன், தேறிய விதைக்குவியல்கள் மட்டுமே சான்றட்டைகள் பொருத்தப் பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட வேண்டும்.

உற்பத்தியாளர்கள் முளைப்புத்திறன் மற்றும் பிற ரக கலவன்கள் சதத்தில் தேறிய விதைக்குவியல்களுக்கு சான்றட்டைகள் பொருத்த சான்றட்டை தேவைப்பட்டியலை விதைச்சான்று அலுவலர்களிடம் இருந்து பெற்று திருவண்ணாமலை விதைச்சான்று உதவி இயக்குனர் அலுவலகத்தில் அளித்து சான்றட்டைகளை பெறவும். ஆதாரநிலை விதை குவியல்களுக்கு வெள்ளை நிறச்சான்றட்டைகளும், சான்று நிலை விதை குவியல்களுக்கு நீல நிற சான்றட்டைகளும் விதைச்சான்று உதவி இயக்குனரால், உரிய தொகையை பெற்றுக்கொண்டு வழங்கப்படும். இவ்வாறு பெறப்பட்ட சான்றட்டைகளில் அச்சடிக்கப்பட வேண்டிய விவரங்கைள விதைச்சான்று அலுவலரிடம் பெற்று தெளிவாக அச்சடித்து விதைச்சான்று அலுவலரின் கையொப்பத்தினை பெற வேண்டும்.

அச்சடித்த சான்றட்டையுடன் உற்பத்தியாளர் அட்டையையும் முழுமையாக பூர்த்தி செய்து, உற்பத்தியாளர் கையொப்பமிட்ட சான்றட்டை மற்றும் உற்பத்தியாளர் அட்டை இரண்டையும் விதைச்சான்று அலுவலரிடம் கொடுத்து விதைச்சான்று அலுவலரால் விதை கோணிப்பைகளின் மேல் வைத்து தைத்து ஈய வில்லை பொருத்தி, முத்திரையிட்டு அதன்பிறகே விநியோகம் செய்ய வேண்டும்.

எனவே உற்பத்தியாளர்கள் மேற்கூறிய முறைப்படி சான்றட்டைகளை பொருத்தி விதைகளை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அவர் அதில் கூறி உள்ளார்.

## பொன்னமராவதி அருகே செம்மை சம்பா நெல் நடவுப்பணிகள் அதிக மகசூலால் விவசாயிகள் ஆர்வம்

பொன்னமராவதி, : பொன்னமராவதி பகுதியில் செம்மை சம்பா நெல் நடவின் காரணமாக அதிக மகசூல் கிடைக்கிறது என விவசாயிகள் நடவு பணியில் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

பொன்னமராவதி பகுதியில் சமீபத்தில் லேசான மழை பெய்தது. இதனைப்பயன்படுத்தி ஒரு சில இடங்களில் நெல் நடவு செய்தனர். ஆனால், தொடர்ந்து மழை பெய்யாமல் ஏமாற்றியதால், நடவு செய்த பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது. எனினும், இப்பகுதியில் கிணற்றுப்பாசனம் மூலமாக மோட்டார் வைத்துள்ள விவசாயிகள் நடவு செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். பொன்னமராவதி பகுதியில் திருக்களம்பூர், வேந்தன்பட்டி, வார்ப்பட்டு, ஏனாதி, காட்டுப்பட்டி, ஆலவயல், கண்டியாநத்தம், கல்லம்பட்டி, ஒலியமங்களம், சேரனூர், நல்லூர், செம்பூதி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் கிணற்றுப்பாசனம் மூலமாக நடவுப்பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இப்பகுதியில் செம்மை நெல் நடவு (வரிசை நடவு) மூலமாகவே விவசாயிகள் ஆர்வமாக சாகுபடி செய்கின்றனர். இதுபற்றி விவசாயி அழகு கூறுகையில், கொடிப்பிடித்து நடுவதன் மூலமாகவும், களை எடுக்கும் கருவி மூலமாகவும் களை எடுக்க, உரம் போட என அனைத்து பணிகள் மேற்கொள்ள இந்த நடவு ஏதுவாக உள்ளது. மேலும் இந்த நடவு செய்வதினார் அதிக மகசூலும் கிடைக்கிறது என்றார். விவசாய சங்கத்தைச் சேர்ந்த நல்லையா கூறுகையில், விவசாயிகளுக்கு தேவையான நேரத்தில் நெல் விதைகள், உரங்கள், மருந்துகள், களை எடுக்கும் கருவிகள், மருந்து தெளிப்பான் போன்றவைகள் மானிய விலையில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

## பயறு விதைகளை விதை நேர்த்தி செய்தால் அதிக மகசூல் பெறலாம் வேளாண்துறை அறிவுரை

சிவகாசி, : பயறு விதைகளை கடினப்படுத்தி, விதை நேர்த்தி செய்து விதைத்தால் அதிக மகசூல் பெறலாம் என வேளாண்துறை அதிகாரி ஆலோசனை வழங்கியுள்ளார். வெம்பக்கோட்டை ஒன்றிய வேளாண்மை உதவி இயக்குனர் வனஜா அறிக்கை: பருவமழை பெய்ய துவங்கியுள்ளதால் தற்போது விவசாயிகள் தங்களது பணியில் தீவிரம் காட்டி வருகின்றனர். பயறு சாகுபடி செய்யும் விவசாயிகள், விதைகளை கடினப்படுத்தி, விதைநேர்த்தி செய்து விதைக்க வேண்டும். இதனால் விதைகளின் முளைப்புத்திறன் அதிகரிக்கும். சீரான முளைப்புத்திறன் கிடைக்கும். வறட்சியைத் தாங்கும் சக்தியும் கிடைக்கும். மகசூலும் அதிகரிக்கும். பயறு சாகுபடி செய்யும் விவசாயிகள், விதைகளை கடினப்படுத்துவது அவசியம்.

விதைகளை கடினப்படுத்தும் முறை: உளுந்து விதைகளை 100 பிபிஎம் துத்தநாக சல்பேட் கரைசலிலும், பாசிப்பயறு விதைகளை 100 பிபிஎம் மெக்னீசியம் சல்பேட் கரைசலிலும் 3 மணிநேரம் ஊற வைத்து, தன் ஈரப்பதம் வரும் வரை நிழலில் உலர்த்த வேண்டும். ஒரு கிலோ விதைக்கு 350 மி.லிட்டர் கரைசல் போதுமானது. (100மி.கி., உப்பை ஆயிரம் மி.லிட்டர் நீரில் கரைத்தால் 100 பிபிஎம் கரைசல் கிடைக்கும்). விதைக்கும் போது ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் டிரைக்கோ டெர்மாவிரிடி கலந்து விதைக்கவேண்டும். இவ்வாறு விதை நோர்த்தி செய்து விதைப்பதால், விதை மூலம் பரவும் நோய்கள் பரவாமல் தடுக்கலாம். ஒரு ஏக்கருக்கு ஒரு பாக்கெட் ரைசோபியம், ஒரு பாக்கெட் பாஸ்போ பாக்டீரியா, உய¤ர் உரங்கள¢ 200 மி.லிட்டர் ஆறிய வடிகஞ்சியில், ஒரு ஏக்கருக்கு தேவையான விதையை கலந்து, நிழலில் உலர வைத்து விதைக்க வேண்டும்.

இவ்வாறு விதைப்பதால் காற்றில் உள்ள தழைச்சத்தும், பயறுக்கு தேவையான மணிச்சத்தும் கிடைத்து, பயிரின் வேர் வளர்ச்சி நன்றாக இருக்கும். வறட்சியை தாங்கி நன்கு வளரும். பயறு விதைகளை விதைக்கும்போது, விதை நேர்த்தி செய்து விதைத்து, விவசாயிகள் அதிக மகசூல் பெற்று பயனடையலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தொடர்மழையால் தேயிலையில் கொப்பள நோய் அபாயம் மருந்து தெளிக்க அறிவுறுத்தல்

ஊட்டி, : கடந்த ஒரு ஆண்டுக்கு பிறகு நீலகிரியில் பருவமழை குறித்த காலத்தில் துவங்கி பெய்து வருகிறது. இம்முறை ஜூன் மாதம் துவங்கிய மழை, ஜூலை இறுதி வரை இடைவிடாமல் பெய்தது. ஊட்டி, கூடலூர், குந்தா மற்றும் பந்தலூர் பகுதிகளில் மழை கொட்டித் தீர்த்தது.

மேலும் எந்நேரமும் மேகமூட்டமும், காற்றுடன் கூடிய சாரல் மழையும் பெய்து வந்தது. கூடலூர், தேவாலா, அப்பர்பவானி, அவலாஞ்சி போன்ற நீர்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்தது. இதில், அப்பர்பவானி, அவலா ஞ்சி, பைக்காரா போன்ற மின் உற்பத்திக்கு பயன்படும் அணைகள் நிரம்பி வழிந்தன. மேலும் தேயிலை, மலைகாய்கறி விவசாயிகள் மகி ழ்ச்சி அடைந்னர். விவசாய பணியும் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டது. கடந்த இரு ஆண்டுகளாக காய்ந்து போய் தரிசு நிலமாக கிடந்த விவசாய நிலங்களில் கூட விவசாயிகள் பயிர் செய்ய துவங்கினர். தொடர்ந்து கடந்த ஆகஸ்ட் மாத துவக்கம் முதல் மழை சற்று குறைந்தது.

இருப்பினும் மேகமூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவி வந்தது. இந்நிலையில், இம்மாத துவகத்தில் இருந்து மழை பெய்து வருகிறது.

மஞ்சூர், தேவர்சோலை, எடக்காடு, இத்தலார் போன்ற பகுதிகளில் சில சமயங்களில் மழையும், அவ்வப்போது மேகமூட்டமான காலநிலையும் நிலவி வருகிறது. மழை மற்றும் மேகமூட்டம் காரணமாக போதிய சூரிய ஒளி இன்றி தேயிலை செடிகளில் கொ ப்பள நோ யின் தாக்குதல் ஆங்காங்கே காணப்படுகிறது. தற்போது கொப்பள நோய் மிகவும் வேகமாக பரவுவதற்கு உகந்ததாக உள்ள து. மேகமூட்டத்துடன் காணப்ப டும் காலநி லை மற்றும் தொடர் மழை பெய்து வரும் நிலையில் தேயிலையில் கொப்பள நோய் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனை தவிர்க் கும் வகையில் தேயி லைக்கு உரிய காலத்தில் மருந்து தெளித்து மகசூல் இழப்பை விவசாயிகள் தவிர்க்க வேண்டும் என தோட்டக்கலைத்துறை அறிவுறுத்தி உள்ளது.

## பருத்தியில் வேரழுகல், தத்துப்பூச்சி நோய் கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு யோசனை

வேப்பந்தட்டை, : பருத்தியில் வேரழுகல் மற்றும் தத்துப்பூச்சிகளை கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு வேளாண் அறிவி யல் மையம் ஆலோ சனை வழங்கியது.

பெரம்பலூர் மாவட்டம் வாலிகண்டபுரம் ஹேன்ஸ் ரோவர் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் வெங்கடேசன் வெளியிட்டுள்ள அறிக்கை:
கடந்த வாரத்திற்கு முன் விட்டுவிட்டு பெய்த மழை காரணமாக பருத்தியில் நோய் தாக்குதல் இருப்பது விவசாயிகள் மூலம் தெரியவந்துள்ளது.
பருத்தியில் தற்போது தத்துப்பூச்சி மற்றும் இலைப்பேன் தாக்குதல் தென்படுகிறது. இதுகுறித்து பெரம்பலூர் மாவட்ட பருத்தி வயல்களில் பருத்தி பாதுகாப்பு வல்லுனர் திவ்யா, திட்ட அலுவலர் சரவணன், களப்பணியாளர்கள் ஆய்வு மேற்கொண்டனர்.
வேரழுகல் நோய் தாக்கிய செடிகளை பயிர் மருத்துவ ஆய்வு கூடத் திலும், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக நோயியல் வல்லுனர்கள் மூலமும் ஆய்வு செய்ததில் மேக்ரோபேமினா பெசியோலினா என்ற பூஞ்சாணத்தால் ஏற்படக்கூடிய வேரழுகல் நோய் என கண்டறியப்பட்டுள்ளது.
இந்நோய் பாதித்த செடிகள் வாடியும், வேர்ப்பகுதி மற்றும் தண்டு பகுதிக்கு இடையே கருமை அல்லது செந்நிறத்தில் சுருங்கியும், முதிர்ந்த நிலையில் இரண்டாம் நிலை வேர்கள் அழுகியும் செடிகள் இறந்துவிடும்.
இதை கட்டுப்படுத்த நோய் தாக்குதல் ஆரம்ப நிலையிலேயே டி.விரிடி என்ற உயிரியல் பூஞ்சாண கொல்லியை ஒரு லிட்டர் நீருக்கு 4 கிராம் என்ற அளவிலோ, புரேபிகோனசோல், டெபுகோனசோல், அமிஸ்டார், நேடிவா போன்ற ரசாயன பூஞ்சாண கொல்லிகளில் ஏதாவது ஒன்றை 1 லிட்டர் நீருக்கு 1 மில்லி என்ற அளவில் கலந்து நோய் பாதித்த செடிகளுக்கும், அதை சுற்றியுள்ள செடிகளுக்கும் வேர் பகுதியில் ஊற்றுவதன் மூலம் வேரழுகல் நோயிலிருந்து பருத்தி செடிகளை காப்பாற்றலாம்.
தத்துப்பூச்சி தாக்குதல் இருந்தால் செடிகளின் இலைகளின் ஓரம் மஞ்சள் நிறத்திலும், சுருங்கியும் காணப்படும். இதை கட்டுப்படுத்த வேம்பு சார்ந்த பூச்சி கொல்லிகளான 5 சதம் வேப்பங்கொட்டை சாறு கரைசல் அல்லது நீவின், நீமசால் போன்றவற்றில் ஏதாவது ஒன்றை 1 லிட்டர் நீருக்கு 3 மில்லி என்ற அளவிலும், தாக்குதல் அதிகம் இருக்கும்போது தயாமீதாக்ஸிம்(அக்ட்ரா) என்ற பூச்சிகொல்லியை 10 லிட்டர் நீருக்கு 4 கிராம் என்ற அளவில் 10 மில்லி ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளிக்க வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## 10 விவசாயிகளுக்கு சம்பா பயிர் கடன்

பாபநாசம், : சோத்தமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 10 விவசாயிகளுக்கு ரூ.2.50 லட்சம் கடனுதவி வழங்கப்பட்டது. பாபநாசம் அருகே சோத்தமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிகளுக்கு சம்பா பயிர் கடன் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. 10 விவசாயிகளுக்கு ரூ.2.50 லட்சம் காசோலையை வங்கி தலைவர் ராஜகோபால் வழங்கினார். வங்கி செயலாளர் ராஜேந்திரன், வங்கி துணைத்தலைவர் சுரேஷ்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## வறட்சி தாங்கி வளரும் ஒட்டுமா ரகம் வெளிமாவட்ட விவசாயிகள் வரவேற்பு

ராமநாதபுரம், : வறட்சியை தாங்கி வளரும் ஒட்டுமா கன்றுகளுக்கு வெளிமாவட்டத்தில் நல்ல வரவேற்பு உள்ளது. முக்கனிகளில் ஒன்றான மாம்பழங்களில் ஒட்டுமா ரகங்களை சாகுபடி செய்வதில் ராமநாதபுரம் மாவட்டம் முன்னிலையில் உள்ளது. வறட்சி மாவட்டம் என்ற பெயர் பெற்ற இந்த மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் ஒட்டுமா செடிகளை வெளிமாவட்டத்தினர் விரும்பி வாங்கி செல்கின்றனர். ஒட்டுவகை மா செடிகளுக்கு வரவேற்பு அதிகம் உள்ளதை தொடர்ந்து உச்சிப்புளி அருகே உள்ள சுந்தரமுடையான் கிராமத்தில் 30 ஏக்கரில் அரசு பழப்பண்ணையில் ஒட்டுமா செடி வளர்ப்பு பிரசித்தி பெற்றுள்ளது. தாய் மரச்செடியில் இருந்து கிளைகள் மூலம் ஒட்டுமா செடிகள் பதியம் செய்யும் முறையில் ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர். 2 முதல் 3 ஆண்டு களில் காய்க்கத்தொடங்கும் ஒட்டுமா ரகங்கள் திருநெல்வேலி, மதுரை, சிவகங்கை, விருதுநகர், திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் இதனை வாங்கி¢ சாகுபடி செய்கின்றனர். பங்கனபள்ளி, இமாம்சந்த், அல்போன்சா, பெங்களூரூ, செந்தூரன், காளப்பாடு, மல்கோவா, நீலம், மதரஸா உள்ளிட்ட ஒட்டுமா ரகங்கள் உற்பத்தி செய்வதில் தர்மபுரியைச் சேர்ந்த ஊழியர்கள் இப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தோட்டக்கலை உதவி இயக்குனர் பரமசிவம் கூறுகையில், தாய் மரத்தில் இருந்து ஒட்டுமா செடி ரகத்தை தண்டுப்பகுதியை சீவிவிட்டு ஒன்றோடு ஒன்றாக இணைக்கப்பட்டு சிறுகயிறு மூலம் இறுக கட்டப்படும். இணைக்கப்பட்ட 60 நாட்களுக்கு பின்னர் மீண்டும் சீவிட்டு தாய்மரத்துடன் இணைப்பில் செடிகள் இருக்கும்படி பராமரித்து வரப்படும் பின்னர் 30 நாட்களுக்கு பின்னர் தாய்செடியில் இருந்து ஒட்டுரகம் தனியாக

பிரிக்கப்படும். 90 நாட்களில் ஒட்டுமா ரகம் விற்பனைக்கு வழங்கப்படும். இவ்வகை ரகங்கள் 6 மாதத்தில் பூக்க தொடங்கி விடும். பூக்களை 3 வருடம் வரை பூக்களை மட்டும் ஒடித்து விட்டு மரம் வளர்வதற்கு நீர் பாய்ச்ச வேண்டும். 3 வருடத்திற்கு பின்னர் காய்க்க தொடங்கி நல்ல பலனைத்தரும். வறட்சியை தாங்கி வளரக்கூடிய இவ்வகை செடிகளை பிற மாவட்ட விவசாயிகள் விரும்பி வாங்கி செல்கின்றனர். ஒட்டுமா செடி ஒன்று ரூ.40க்கு விற்பனை செய்யப்படுகிறது. வருடத்திற்கு சுமார் 40 ஆயிரம் ஒட்டுமா ரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு வரும். நல்ல பலன் தருகிறது.